**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**C.C.No.27/2014**
**Prosecution Witness P.W. 5**

.....

Name : திரு. திருப்பதி Calling :

Father's name : Religion :

Village : Age :

Taluk :

நாள் - **09.09.2025**

**(எதிரிகள் ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது).**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தமிழ்நாடு அரசு கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி 2020 ம் ஆண்டு ஓய்வு பெற்றுவிட்டேன். நான் இதற்கு முன்பு டி.குன்னத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிய போது, கடந்த 27.09.2005 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் டி.கல்லுப்பட்டி தமிழ்நாடு மின்சார வாரிய அலுவல் பணியாற்றும் செல்வராஜ், உதவி பொறியாளர் கூப்பிட்டதன்பேரில், டி.குன்னத்தூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீமாணிக்கவிநாயகர் மில்லுக்கு போனேன். அங்கு என் முன்பாக நான்கு பெட்டிகளை கைப்பற்றினார்கள். எதற்காக அந்த இடத்திற்கு மின்வாரிய அலுவலர்கள் வந்தார்கள் என்று தெரியாது. பெட்டிகளை கைப்பற்றியதற்காக என்னிடம் அத்தாட்சியில் கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் செய்த அத்தாட்சி **அ.சா.ஆ.4** ஆகும். இதுசம்பந்தமாக என்னை காவல்துறையினர் விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பெட்டிகள் தான் அவைகளா என்றதற்கு சாட்சி 20 ஆண்டுகள் ஆகிவிட்டதால் என்னால் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

**குறுக்குவிசாரணை**

நான் 25 ஆண்டுகளாக கிராம நிர்வாக அலுவலராக பணி செய்தேன். நான் மின்சாரவாரிய அலுவலரின் அழைத்ததன் பேரில் சென்றேன். வாய்மொழியாக தான் அழைத்தார்கள். 27.09.2005 க்கு முன்பாக எந்த தினத்திலும் நான் சம்பவ இடத்திற்கு நான் சென்றதில்லை. அ.சா.ஆ.4 ஆவணமானது மில்லில் வைத்து தயார் செய்யப்பட்டது. அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை.

அ.சா.ஆ.4 ல் என்னுடன் வேறு யாராவது கையெழுத்து போட்டார்களா என்றால் ஞாபகமில்லை. அ.சா.ஆ.4 ஆவணத்தின் என்ன சங்கதிகள் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் அரசு ஊழியர் என்பதால் காவல்துறையினர் வேண்டுகோளுக்கு இணங்க காவல்துறையினருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என் முன்பாக எந்த பெட்டியும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு குறித்து 27.09.2005 தேதிக்கு பின்பு காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு குறித்து போலிசார் எந்த தேதியிலும் என்னை விசாரணை செய்யவில்லை. அ.சா.ஆ.4 ஆவணத்தில் மின்சாரவாரியத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும், மில்லில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM
Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.10 10:19:22 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.